பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

02 06 2025 6 45
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தின் வருடாந்திர கூட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பங்கேற்கிறார்.
- நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண் உற்பத்தி முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் மாநிலங்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.
- கோடை விடுமுறை முடிந்து தமிழகத்தில் பள்ளிகள் இன்று திறக்கப்படுகின்றன.
- ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தின் வருடாந்திர பொதுக்குழுக் கூட்டத்தில் பங்கேற்கிறார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் நேற்று தொடங்கிய இந்தக் கூட்டத்தில், விமான நிறுவனங்களின் பொருளாதார சூழல், பல்வேறு புதிய இடங்களுக்கான விமானப் போக்குவரத்து இணைப்பு வசதி, எரிசக்தி பாதுகாப்பு, விமான எரிபொருள் உற்பத்தி, பசுமை எரிபொருள் திட்டங்களுக்கு நிதியுதவி மற்றும் புதுமைக் கண்டுபிடிப்புகள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்தியாவின் விமானப் போக்குவரத்து துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியில் இத்துறையின் பங்களிப்பு குறித்து உலகின் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த தலைவர்கள் அறிந்துகொள்ள இந்தக் கூட்டம் ஒரு வாய்ப்பாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் உறுதியான தலைமையின் கீழ் இந்தியா உலகின் 4வது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்துள்ளதாக பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா சொற்பொழிவு நிகழ்ச்சியில் பேசிய அவர், உள்நாட்டு உற்பத்திக்கு அதிக முன்னுரிமை அளித்ததன் காரணமாகவே இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறினார்.

நாட்டில் 92 சதவீத அளவிற்கு முன்பு செல்ஃபோன்கள் இறக்குமதி செய்யப்பட்ட நிலையில், தற்போது உள்நாட்டிலேயே 97 சதவீத செல்ஃபோன்கள் உற்பத்தி செய்யப்படுவதுடன், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பாதுகாப்பு தளவாட உற்பத்தி ஒரு லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாயை எட்டி இருப்பதுடன், சுமார் 25 சதவீத மக்கள் வறுமைக் கோட்டிலிருந்து மீண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமரின் வீட்டு வசதித் திட்டம், தூய்மை இந்தியா, விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு நிதியுதவி போன்றவை பெண்கள், விவசாயிகள் மற்றும் சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு அதிகாரமளித்துள்ளதாகவும் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் மாநிலங்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

தற்போது மாநிலங்களவை உறுப்பினர்களாக உள்ள திமுகவின் திரு. வில்சன், திரு. மு. சண்முகம், திரு. எம்.எம். அப்துல்லா, அதிமுகவின் திரு. சந்திரசேகரன், மதிமுகவின் திரு. வைகோ, பாமகவின் திரு. அன்புமணி ராமதாஸ் ஆகியோரின் பதவிக் காலம் அடுத்த மாதம் 24ஆம் தேதியுடன் முடிவடைய உள்ள நிலையில் இத்தேர்தல் நடைபெறுகிறது.

வேட்புமனுக்களை தாக்கல் செய்ய இம்மாதம் 9ஆம் தேதி கடைசி நாளாகும்.

10ஆம் தேதி வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும்.,

12ஆம் தேதி மனுக்களை திரும்பப் பெற கடைசி நாளாகும்.

போட்டி இருப்பின் இம்மாதம் 19ஆம் தேதி வாக்குப்பதிவு நடத்தப்பட்டு அன்று மாலையே வாக்கு எண்ணிக்கையும் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இத்தேர்தலில் திமுக கூட்டணி சார்பில் 4 பேரும், அஇஅதிமுக சார்பில் இருவரும் போட்டியிடுவதாக அறிவித்துள்ள நிலையில், இவர்கள் 6 பேரும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்படக்கூடும் என்று தெரிகிறது.

<<<<>>>>

தமிழகத்தில் கோடை விடுமுறை முடிந்து பள்ளிக்கூடங்கள் இன்று திறக்கப்படுகிறது.

மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள் உள்ளிட்ட விலையில்லா பொருட்கள் அனைத்தும் இன்றே வழங்கப்படும் என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகத்தை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகம் மற்றும் கேரளாவிற்கு அனுமதிக்கப்பட்ட ரயில்வே திட்டங்கள் அனைத்தையும் முழுமையாக நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

மத்திய அரசால் தெற்கு ரயில்வே திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி, பயன்படுத்தப்படாமல் ரயில்வே வாரியத்திடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டதாக ஊடகங்களில் வெளியான செய்திகளுக்கு தெற்கு ரயில்வே விளக்கமளித்துள்ளது.

இட ஆய்வு, ரயில் பாதை அமையும் பகுதி, விரிவான திட்ட அறிக்கை இறுதி செய்யப்பட்டு அமைச்சகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு மாநில அரசுகள் மூலம் நிலம் கையகப்படுத்தப்பட்ட பிறகே டெண்டர் இறுதி செய்யப்பட்டு பணிகள் தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தமிழகம் மற்றும் கேரளாவிற்கான சில ரயில் திட்டங்கள் இந்த நடைமுறைகளை முழுமையாக பூர்த்தி செய்யாததால் நடப்பு காலாண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி, திரும்ப ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும், நடைமுறைகள் முடிவடைந்த பிறகு வரும் காலாண்டுகளில் தேவையான நிதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

தமிழக ரயில் திட்டங்களை நிறைவேற்றுவதில் நிதிப் பற்றாக்குறை ஏதும் இல்லை என்றும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழக அரசு ஆக்கப்பூர்வமான திட்டங்களை செயல்படுத்தினால் தேவையான நிதியை மத்திய அரசு வழங்கும் என்று பிஜேபி மூத்த தலைவர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் கூறியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், செயல்படுத்தப்படும் திட்டங்களுக்குத்தான் நிதி ஒதுக்கப்படும் என்றார்.

நாட்டிலேயே தமிழகத்தில் வந்தேபாரத் ரயில்கள் அதிகளவில் இயக்கப்படும் நிலையில், ரயில்வே துறைக்கு எதிராக திமுக பொதுக்குழுவில் தீர்மானம் இயற்றப்பட்டது சரியானதல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறுபான்மையினர் நலன் கருதியே வக்ஃப் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழக சட்டம்-ஒழுங்கு நிலவரம் தொடர்பான வதந்திகளை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என காவல்துறை டிஜிபி திரு. சங்கர் ஜிவால் தெரிவித்துள்ளார்.

ஆங்கில தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டிருப்பதற்கு அடையாளமாகக் கருதப்படும் சாலை மறியல், முழு அடைப்பு, இணைய சேவை முடக்கம் போன்ற எதுவும் தமிழ்நாட்டில் நடக்கவில்லை என்று கூறியுள்ளார்.

எனவே பொதுமக்கள் உண்மைகளை சரிபார்த்து பொதுவெளியில் வெளிவரும் தகவல்கள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மாநிலத்தில் கள்ளச்சாராய உயிரிழப்புகளைத் தடுக்க தனி கவனம் செலுத்தப்பட்டு வருவதகவும், போதைப் பொருட்கள் புழக்கம் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகவும் திரு. சங்கர் ஜிவால் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வாரச் சந்தையில் சுமார் 3 கோடி ரூபாய்க்கும் அதிகமாக ஆடுகள் விற்பனையாகியுள்ளது.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலங்களில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் ஆடுகளை வாங்கிச் சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா மற்றும் அவரது அமைச்சரவையில் உள்துறை அமைச்சராக இருந்த திரு. கமால் ஆகியோருக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நடுவர் மன்றம் கைது வாரண்ட் பிறப்பித்துள்ளது.

<<<<>>>>

தைவான் மீது தாக்குதல் நடத்த முயற்சித்து வருவதாக அமெரிக்கா கூறியுள்ள குற்றச்சாட்டை சீனா மறுத்துள்ளது.

<<<<>>>>

தெலங்கானா மாநிலம் உருவான தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

<<<<>>>>

மகாராஷ்டிராவில் புதிதாக 65 பேருக்கு கோவிட் தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அம்மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் ஆழித் தேரோட்டத்திற்கான முன்னேற்பாடுகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர் பாபு ஆய்வு செய்துள்ளார்.

<<<<>>>>

நாகை மாவட்டம் கருங்கன்னி புனித அந்தோனியார் தேவாலய தேர்பவனி விமரிசையாக நடைபெற்றது.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் 9 நாட்களாக நடைபெற்று வந்த மலர்க் கண்காட்சி நேற்றுடன் நிறைவடைந்தது.

<<<<>>>>

குமரி மாவட்டம் பேச்சிப்பாறை அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

சென்னை தீவுத் திடலில் மீன்வளத் திருவிழாவை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மீன்வளத்துறை அமைச்சர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஐபி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

அகமதாபாதில் நேற்று நடைபெற்ற இப்போட்டியின் இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி முதலில் பந்துவீச தீர்மாணித்ததை அடுத்து, பேட் செய்த மும்பை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 203 ரன் எடுத்தது.

204 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பஞ்சாப் அணி 19 ஓவரிலேயே 5 விக்கெட் இழப்புக்கு 207 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

முன்னதாக மழை காரணமாக ஆட்டம் சிறிது நேரம் தடைபட்டது.

<<<<>>>>

**Ulaan Baatar** ஓபன் மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் உதித் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஆடவர் 61 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

<<<<>>>>

யுரோப்பியன் கோப்பை பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியா 2 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

ரோமில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் குழு மற்றும் கலப்புக் குழு பிரிவுகளில் 2 வெள்ளிப் பதக்கங்களையும், மகளிர் குழு பிரிவுகளில் 2 வெண்கலப் பதக்கங்களையும் வென்றது.

மகளிர் பிரிவில் பூஜா வெண்கலப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>

பிரிட்டிஷ் ஓபன் ஸ்குவாஷ் போட்டியின் இந்தியாவின் **Anahat Singh** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-3, 6-11, 11-8, 11-3 என்ற செட் கணக்கில் ஸ்காட்லாந்தின் **Lisa Aitken**–ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Abhay Singh**-ம் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-9, 4-11, 11-6, 11-4 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் **Timothy Brownell**-ஐ வென்றார்.

<<<<>>>>